ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி
# 7.4 – ஆழியெழ

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.4 – ஆழியெழ

‡ ஆழி எழச் ⋆
சங்கும் வில்லும் எழ ⋆
திசை வாழி எழத் ⋆
தண்டும் வாளும் எழ ⋆
அண்டம் மோழை எழ ⋆
முடி பாதம் எழ ⋆
அப்பன் ஊழி எழ ⋆
உலகம் கொண்டவாறே ‖ **7.4.1** ‖

ஆறு மலைக்கு ⋆
எதிர்ந்தோடும் ஒலி ⋆
அரவூறு சுலாய் ⋆
மலை தேய்க்கும் ஒலி ⋆
கடல் மாறு சுழன்று ⋆
அழைக்கின்ற ஒலி ⋆
அப்பன் சாறு பட ⋆
அமுதம் கொண்ட நான்றே ‖ **7.4.2** ‖

நான்றில ஏழ் ⋆
மண்ணும் தானத்தவே ⋆
பின்னும் நான்றில ஏழ் ⋆
மலை தானத்தவே ⋆
பின்னும் நான்றில ஏழ் ⋆

கடல் தானத்தவே ⋆
அப்பன் ஊன்றி இடந்து ⋆
எயிற்றில் கொண்ட நாளே ॥ **7.4.3** ॥

நாளும் எழ ⋆
நில நீரும் எழ ⋆
விண்ணும் கோளும் எழ ⋆
எரி காலும் எழ ⋆
மலை தாளும் எழச் ⋆
சுடர் தானும் எழ ⋆
அப்பன் ஊளி எழ ⋆
உலகம் உண்ட ஊணே ॥ **7.4.4** ॥

ஊண் உடை மல்லர் ⋆
ததர்ந்த ஒலி ⋆
மன்னர் ஆண் உடைச் சேனை ⋆
நடுங்கும் ஒலி ⋆
விண்ணுள் ஏண் உடைத் தேவர் ⋆
வெளிப்பட்ட ஒலி ⋆
அப்பன் காண் உடைப் பாரதம் ⋆
கை அறைப் போழ்தே ॥ **7.4.5** ॥

போழ்து மெலிந்த ⋆
புன் செக்கரில் ⋆
வான் திசை சூழும் எழுந்து ⋆
உதிரப் புனலா ⋆
மலை கீழ்து பிளந்த ⋆
சிங்கம் ஒத்ததால் ⋆

அப்பன் ஆழ் துயர் செய்து ⋆
அசுரரைக் கொல்லும் ஆறே ॥ **7.4.6** ॥

மாறு நிரைத்து ⋆
இரைக்கும் சரங்கள் ⋆
இன நூறு பிணம் ⋆
மலை போல் புரள ⋆
கடல் ஆறு மடுத்து ⋆
உதிரப் புனலா ⋆
அப்பன் நீறு பட ⋆
இலங்கை செற்ற நேரே ॥ **7.4.7** ॥

நேர் சரிந்தான் ⋆
கொடிக் கோழி கொண்டான் ⋆
பின்னும் நேர் சரிந்தான் ⋆
எரியும் அனலோன் ⋆
பின்னும் நேர் சரிந்தான் ⋆
முக்கண் மூர்த்தி கண்டீர் ⋆
அப்பன் நேர் சரி வாணன் ⋆
திண் தோள் கொண்ட அன்றே ॥ **7.4.8** ॥

அன்று மண் நீர் எரி கால் ⋆
விண் மலை முதல் ⋆
அன்று சுடர் ⋆
இரண்டு பிறவும் ⋆
பின்னும் அன்று ⋆
மழை உயிர் தேவும் மற்றும் ⋆

அப்பன் அன்று முதல் ⋆
உலகம் செய்ததுமே ‖ **7.4.9** ‖

மேய் நிரை கீழ் புக ⋆
மா புரள ⋆
சுனை வாய் நிறை நீர் ⋆
பிளிறிச் சொரிய ⋆
இன ஆநிரை பாடி ⋆
அங்கே ஒடுங்க ⋆
அப்பன் தீ மழை காத்துக் ⋆
குன்றம் எடுத்தானே ‖ **7.4.10** ‖

‡ குன்றம் எடுத்த பிரான் ⋆
அடியாரொடும் ⋆
ஒன்றி நின்ற ⋆
சடகோபன் உரை செயல் ⋆
நன்றி புனைந்த ⋆
ஓர் ஆயிரத்துள் இவை ⋆
வென்றி தரும் பத்தும் ⋆
மேவிக் கற்பார்க்கே ‖ **7.4.11** ‖

அடிவரவு — ஆழியெழ ஆறுமலைக்கு நான்றில நாளும் ஊணுடை போழ்து மாறு நேர் அன்று மேய்நிரை குன்றம் கற்பார்

ஆழியெழ முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்